11.08.2025

OS No: 540/2019

வா.சா. 3 திரு. முத்துராமலிங்கம் த/பெ.கருப்பையா

**1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை யார் கிரையம் பெற்றது என்றால் நான் தான் கிரையம் வாங்கினேன். 5 செண்டுகளை கிரையம் வாங்கினேன். எனக்கு கிரையம் கொடுத்த காளிமுத்துக்கு மேற்படி சொத்து எப்படி பாத்தியம் என்றால் அவருக்கு அது கிரைய பாத்தியமாகும். 1ம் பிரதிவாதியின் தந்தை தான் மேற்படி காளிமுத்து என்றால் சரிதான். காளிமுத்து உயிருடன் இருந்த வரை அவர் பெயரில் தான் தாவா சொத்து உட்பட மொத்த சொத்திற்கும் காளிமுத்து பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். மேற்படி காளிமுத்து உயிருடன் இருந்த காலத்தில் அவரது மனைவி திருவாயிக்கு 5 செண்டு நிலத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். காளிமுத்து இறந்த பின்பு தாவா சொத்து உட்பட மொத்த சொத்தும் அவரது மனையியான திருவாயி பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். மேற்படி உரிமைமாற்றத்தின் அடிப்படையில் திருவாயி மொத்த சொத்துக்களையும் அவரது மகளான 1ம்பிரதிவாதி வளர்மதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேறப்டி செட்டில்மெண்ட் உரிமைமாற்றத்தின் அடிப்படையில் தாவா வழக்கின் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி மொத்த சொத்துக்களையும் கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்திற்கு வழக்கறிஞரிடம் சங்கதிகளை தெரிவித்தது யார் என்றால் நான் தான் தெரிவித்தேன். 8ம் வாதி சாஜகான் பத்திர எழுத்தர் என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்தில் கிரையம் வாங்கிய நபர்களில் 8ம் வாதியும் ஒருவர் என்றால் சரிதான். மேற்படி 8ம் வாதி கிரையம் பெற்ற சொத்தானது தாவா வழக்கில் 8ம் இலக்க சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காளிமுத்து தாவா சொத்தை பொருத்து கிரைய பத்திரம் எதுவும் எங்களுக்கு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி காளிமுத்துவின் சகோதரர் செங்கொடி (எ) ஆறுமுகம் என்றால் சரிதான். மேற்படி செங்கொடி (எ) ஆறுமுகம் தனது சகோதரர் காளிமுத்துவிற்கு

தெரியாமல் மோசடியாக எங்களுக்கான கிரைய பத்திரத்தை ஏற்படுத்தியவர் என்றால் சரியல்ல. பத்திர அலுவலகத்தில் காளிமுத்து கையெழுத்து செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிரைய காலத்தில் இருந்து தாவா சொத்தை நாங்கள் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் எங்களுக்கு அதில் அனுபவ பாத்தியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் பரிகாரங்கள் எதுவும் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை,**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.08.12 09:32:06 +0530